1994 ஜனவரி 5]

(2) நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி 1 லட்சம் டன்கள்

(3) ஜிப்சம் 0.2 லட்சம் டன்கள்

(4) ரெயில்வே, சாலைப் போக்குவரத்து வசதிகள்

(5) மின்சாரம் 10 மெகா வாட்ஸ்

(6) தண்ணீர் நாளொன்றுக்கு சுமார் 5 லட்சம் டன்கள்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் தரம் குறைவானது என்றும் சிமெண்ட் தயாரிக்க தகுதியானது அல்ல என்றும் புவியியல் ஆய்வில் தெரியவந்துள்ளது. உயர்தரமான சுண்ணாம்புக்கற்களை தூரமான இடங்களில் இருந்து கொண்டுவந்து சிமெண்ட் ஆலை நிறுவுவது லாபகரமாக இருக்காது. எனவே உசிலம்பட்டி பகுதியில் அரசுத் துறையான டேன்சம் நிறுவனத்தின் மூலம் புதிய சிமெண்ட் ஆலை நிறுவக்கூடிய சாத்தியக்கூறு இல்லை. தனியார் துறை சிமெண்ட் ஆலை நிறுவ எவரும் அங்கே வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாண்டியம்மாள் அவர்கள் உருக்கத்தோடு கேட்ட காரணத்தினால் தனியார் யாரேனும் அதை அமைக்க முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

168--

ஆம்பூர் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம்.

19991*–டாக்டர் ஜெ. **பரந்தாமன்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டம், ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் நட்சத்திரங்கள் வானில் மின்னலாம். ஆனால் ஒரு முழு நிலவுக்கு ஈடாகாது என்பது போல், மற்ற அரசியல் தலைவர்கள் நட்சத்திரங்களாக மின்னும் போது, முழு நிலவாக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒளிவீசி மக்களைக் காத்து இதயங்களைக் குளிர வைக்கும் இந்நன்னாளில் வரலாறு காணாத அளவுக்கு ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ரூ. 84, சென்ற ஆண்டை விட அதிகம் தந்து, ரூ.524.70 காசு தருவதற்கு பேரணாம்பட்டுத் தொகுதி விவசாய மக்கள் சார்பாக புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கி, தொடர்ந்து மின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதாலும், அதற்குத் துணையாக கரும்பு உற்பத்திக்கும் இந்த பகுதியில் காலணி மற்றும் தோல் தொழிற் சாலைகளுக்கு மின்சாரம் வழங்கிட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டப்படி தொழிற்புரட்சி ஏற்படும் என்பதால், கரும்பு உற்பத்தி மிக அதிகமாக இருப்பதாலும், போதிய நீர் இருப்பதாலும், கரும்பு உற்பத்தியாளர்கள் பங்குத் தொகைத் தரத் தயாராக இருப்பதாலும், பாய்லர் மற்றும் டர்பைனில் கொஞ்சம் மாற்றம் செய்து ஆம்பூர் சர்க்கரை ஆலைகள் மின் உற்பத்தியை கோ-ஜெனரேஷனாக செய்ய அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஜெனரேசன் என்று சொல்லப்படுகிற மின் உற்பத்தியை ஒரு சர்க்கரை ஆலையில் செய்ய வேண்டுமென்று சொன்னால் 15 கோடி ரூபாய் செலவில் அதிக சக்தியுள்ள பாயிலர் அமைக்க வேண்டும். குறைந்த பட்சம் 2,200 டன் கரும்பு அங்கே அந்த ஆலையின் மூலம் பிழியப்பட வேண்டும். இப்பொழுது ஆம்பூர் சர்க்கரை ஆலையை பொறுத்தவரை தினசரி பிழி திறன் 1,400 டன்னாக இருக்கிற காரணத்தால் இப்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லை. கரும்பு உற்பத்தி செய்யும் நிலப் பரப்பு அதிகப்படுத்தப்பட்டால் எதிர் காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு ஏற்றிச் செல்ல தேவையான இடங்களில் கரும்பு சாலைகளைச் சீரமைக்க கரும்பு சாலை திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனியாகக் கேள்வி கேட்க கேட்டுக்கொள்ளுகிறேன்.

1994 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புப் பயிர் அதிகம் உற்பத்தி செய்வதை முன்னிட்டு அந்தப் பகுதியிலே, ஆம்பூர் சர்க்கரை ஆலையை நிறுவி, அந்த சர்க்கரை ஆலையிலிருந்து நல்ல சத்துள்ள சர்க்கரையாக அங்கே வருகிறது என்பது தெளிவாகும். அதை விரிவு படுத்தி, ஏனைய அதாவது பாலாற்றுப் படுகை இல்லாமல் தூரங்களான, மேட்டுப்பகுதியான இடங்களுக்கும் விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்கு கிணறு லோன் மற்றும் மின் இணைப்பு விரைவாக தந்து கரும்பு பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பார்களா என துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் சர்க்கரை ஆலையினுடைய பிழி திறன் 1,400 டன்னாக இருக்கிறது. 2,200 டன் இருந்தால்தான் புல் யூட்டிலைசேசன் என்று சொல்லப்படுகிற முழு பிழி திறனை அங்கே நாம் எதிர்பார்க்க முடியும். அதற்கு கரும்பு பயிரிடும் நிலத்தினுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும். உறுப்பினர் தருமலிங்கம் அவர்களும், டாக்டர் பரந்தாமன் அவர்களும் ஒரு கூட்டணி ஏற்படுத்தி, அங்கே இருக்கிற விவசாயிகளை எல்லாம் அழைத்து அதற்கு உண்டான முயற்சியில் ஈடுபடுவார்களேயானால் அரசு நிச்சயமாக அவர்களுக்கு கை கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 169, திரு. எம்.பி.. சேகர். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

169–

உடல் ஊனமுற்ற ஏழை பெண்களுக்கு திருமணச் செலவுத் தொகை வழங்கும் திட்டம்.

* 21769–**டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா––

உடல் ஊனமுற்ற ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த 5 வது வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கு அவர்களின் திருமணச் செலவிற்காக ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.